# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| OS.No. 242/2018 | Date : 25.06.2025 | PW 2 |
|---|---|---|
| Name: பிர்லா | த/பெ. சின்னதுரை | |

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

அசல் வழக்கு எண். 39/2004 என்ற வழக்கின் பிராது நகலை வா.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் 8 வது பிரதிவாதியாக நான் காட்டப்பட்டு எனக்கு காப்பாளரான எனது தாத்தா மாரியப்பன் காட்டப்பட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கின் தீர்ப்பாணை நகல் வா.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில் தீர்ப்புரை நகல் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி தீர்ப்புரையில் வா.த.சா.ஆ.1 முதல் 3 வரையிலான ஆணங்கள் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் மேற்படி தீர்ப்புரையை இந்த வழக்கில் தாக்கல் செய்தால் மேற்படி ஆவணம் குறித்த சங்கதி தெரிந்துவிடும் என்ற காரணத்தினால்தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி அசல் வழக்கு எண். 39/2004 யில் பி.வா..ஆ.1 ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள கிரய பத்திரம் இந்த வழக்கில் வா.த.சா.ஆ.2 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அசல் வழக்கு எண். 39/2004 யில் பி.வா.சா.ஆ.2 ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள கிரய பத்திரம் இந்த வழக்கில் வா.த.சா.ஆ.1 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அசல் வழக்கு எண். 39/2004 யில் பி.வா.சா.ஆ.3 ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள கிரய பத்திரம் இந்த வழக்கில் வா.த.சா.ஆ.3 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அசல் வழக்கு எண். 39/2004 தீர்ப்புரைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீட்டு வழக்கு எண். 15/2006 வழக்கில் என்னுடைய தாத்தா 8 வது அப்பீல் வாதியாக என்னுடைய காப்பாளராக காட்டப்பட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இறுதிநிலை தீர்ப்பாணை மனுவிலும் நான் தரப்பினராக காட்டப்பட்டுள்ளேன் என்றால் அதுவும் எனக்கு தெரியாது. அந்த மனுவில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையின் பேரில் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் அது பற்றியும் எனக்கு தெரியாது. மேற்படி இறுதிநிலை தீர்ப்பாணை மனுவிலும் 55/2008 யில் கோவிந்தன் என்பவர் தன்னையும் தரப்பினராக சேர்க்க கோரி தாக்கல் செய்த மனு எண். 130/10 மனு உத்தரவின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி சங்கதி எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 ஆக தாக்கல் செய்துள்ள மனு நகல் எனக்கு எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.த.சா.ஆ.10 எனது தாத்தா பெயரில் உள்ள பட்டா நகல் என்றால் சரிதான். மாரியப்பன் பெயரில் உள்ள பட்டாவில் கண்டுள்ள

சொத்துக்களை எப்போது பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் 2003 யில் பிரித்துக்கொண்டோம். வா.த.சா.ஆ.11 மற்றும் வா.த.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள பட்டாவின் படி பட்டா எண் 153 மற்றும் 672 ஆகியவற்றிற்கான பட்டா பழனியம்மாளின் கணவரான 2, 3 பிரதிவாதிகளின் தந்தையான கிருஷ்ணன் பெயரில் உள்ளது என்றால் சரிதான். வா.த.சா.ஆ.13 யில் குறிப்பிடப்பட்டுள்ள குப்ப கவுண்டர் கிருஷ்ணனின் அப்பா என்றால் எனக்கு தெரியாது. மேற்படி ஆவணங்கள் அனைத்தும் தாவா சொத்துக்கள் நாளது தேதி வரை பிரிக்கப்படவில்லை என்பதை காட்டுகின்றன என்றால் பாகப்பிரிவினை செய்து கொண்டோம். மேற்படி பட்டாக்களில் கண்டுள்ள சொத்துக்களை பொறுத்து அசல்வழககு எண். 39/2004 வழக்கை இந்த வழக்கின் 1 முதல் 3 பிரதிவாதிகள் தாக்கல் செய்து பாகப்பிரிவினை பெற்றுள்ளனர் என்றால் சரிதான். அதன் அடிப்படையில்தான் இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கின் 1 முதல் 3 பிரதிவாதிகள் அசல் வழக்கு எண். 39/2004 வழக்கில் தீர்ப்பின் அடிப்படையில் இறுதிநிலை தீர்ப்பாணை மனு எண். 55/2008 தாக்கல் செய்துள்ளனர் என்றாலும அந்த வழக்கிலும் நான் தரப்பினர் என்றாலும் அது குறித்து எனக்கு தெரியும்எ ன்றாலும் சரியல்ல. எனக்கு மேற்படி விவரங்கள் அனைத்தும் தெரியும் என்றாலும் அதை மறைத்து இந்த வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு சட்டப்படி தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(4 முதல் 7 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.)

ஒம்/–பிர்லா

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/– A.சண்முகப்பிரியா,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.